# கர்த்தராகிய இயேசுவே, வாரும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்**, ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

அதைப் போன்று பாடுவது என்பது... நீங்கள் மேலே பரலோகத்திற்குப் போகும்போது, அங்கு அவ்விதமாக பாடிக் கொண்டிருக்கும் இடத்தை அடையும்போது, என்னைக் காண விரும்புகிறேன். நான் அதைச் சுற்றி தான் எங்காவது இருப்பேன். நான்... ஏனென்றால் நான் நிச்சயமாகவே அதை நேசிக்கிறேன்.

மேலும் நான் எப்போதுமே ஜனங்களிடம் கூறியிருக்கிறேன், அங்கே... பிறகு, அங்கே சிங்காசனத்தின் கீழிருந்து தண்ணீர்கள் வெளியே வந்து, இங்கே கீழே பாய்ந்து, நதியின் இரு கரைகளிலும் இருக்கும் ஜீவ விருட்சத்தினூடாக கடந்து போகிறது. அது வளைந்தும், இவ்விதமாக ஒரு பெரிய மலையைச் சுற்றியும் செல்கிறது. மேலும் தூதர்களின் பாடற்குழு நாள்முழுவதும் பாடிக் கொண்டிருக்கிறது, ஏனென்றால் அங்கே இராக்காலம் கிடையாது...

2. இந்த மறுபக்கத்தில், அதோ ஒரு சிறிய புதர் இருக்கிறது. அங்கே தான் அந்த புதரின் கீழ்

தான் நான் உட்கார்ந்து, மறுகரையில் பாடிக்கொண்டிருக்கும் அவைகளைக் கவனித்துக் கேட்க விரும்புகிறேன். பாடுவது உண்மையாகவே எனக்குப் பிடிக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இசையைக் குறித்தும், கூட்டத்தில் தேவனுடைய ஆவியைக் கொண்டு வரும் பாடுதலைக் குறித்தும் ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அது சரியே.

இல்லினாயிஸில் உள்ள ஜெனீவாவில், எப்பொழுதும் தேசத்தை வீசியடித்துச் சென்றதிலேயே மிகப்பெரிய பயங்கரமான போலியோ கொள்ளை நோய்களில் ஒன்று அங்கே இருப்பதாக, எனக்கு இங்கே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அங்கே பத்தொன்பது நோயாளிகள் மற்றும் அவர்களில் அநேகம் பேர் ஏற்கனவே மரித்து விட்டார்கள் என்று நினைக்கிறேன், அது மிகவும் பரிதாபகரமாக உள்ளது, அந்த பயங்கரமான சத்துரு.

எனவே, தேவன் தம்முடைய பலமுள்ள அன்பின் வல்லமையோடு இறங்கி வந்து, அந்தக் கொள்ளைநோயை அங்கே தேசத்தை விட்டு எடுத்துப்போம்படியாக, அதற்காக

ஜெபிக்கும்படியான ஒரு ஜெபத்தைச் செய்யும்படி என்னிடம் கேட்கப்பட்டிருக்கிறது, எனவே இப்பொழுது, நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்தி, அதற்காக ஜெபிப்போம்.

3. எங்கள் அன்புள்ள விலையேறப்பெற்ற கர்த்தாவே, நாங்கள் உம்மிடத்தில் வர மிகவும் தகுதியற்றவர்களாக இருக்கிறோம், ஆயினும் நாங்கள் எதையாகிலும் விண்ணப்பம் பண்ணுவோமானால், நீர் அதைச் செய்வீர் என்று எங்களுக்கு வாக்குப்பண்ணும்படியாக, நீர் எங்கள் மேல் மிகவும் அன்புள்ளவராயிருந்து வருகிறீர். அந்த நம்பிக்கையில் தான், நாங்கள் இன்றிரவு உள்ளே வந்து, எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும், இந்த தேசத்தின் பாவங்களையும், நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் இந்தப் பட்டணத்தின் பாவங்களையும் அறிக்கை பண்ணிக் கொண்டிருக்கிறோம், தேவனே, நீர் இரங்கி, அந்தப் பயங்கரமான போலியோ பிசாசினால் விழுந்து கொண்டிருக்கிற அந்தப் பரிதாபமான சிறு பிள்ளைகளை நினைத்தருளும்.

இப்பொழுதும், உம்மால் இந்தக் காரியத்தை அகற்றிப்போட முடியும் என்று அறிந்திருக்கிறோம். மேலும், தேவனே, அங்கே ஒரு பழைமை நாகரீகமான கூட்டம் தொடங்கப்பட

வேண்டுமென்றும், அந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் ஒரு ஜெபக்கூட்டம் துவங்கப்பட வேண்டுமென்றும் நான் ஜெபிக்கிறேன். சபைகளும், ஜனங்களும் முகங்குப்புற விழுந்து தேவனை நோக்கி உரத்த சத்தமிட்டு கூக்குரலிட்டுக் கதறுவார்களாக. அந்தக் கொள்ளைநோயை நீர் நிறுத்திவிடுவீர் என்று நான் விசுவாசிக்கிறேன், கர்த்தாவே.

4. அந்த ஜனங்களுக்காகவும், அந்தப் பட்டணத்திலுள்ள அந்தக் கிறிஸ்தவர்களுக்காகவும், மற்றும் அந்தப் பரிதாபமான சிறு பிள்ளைகளுக்காகவும் எங்கள் இருதயங்களிலிருந்து இரத்தம் கசிகிறது என்பதை நாங்கள் கூற விரும்புகிறோம். ஓ தேவனே, சாபங்கள் யாவும் விலகிப்போய், அதற்கு மேலும் வியாதியோ, மனத்துயரமோ இல்லாமல் இருக்கும் அந்த நாள் சீக்கிரமாக வரட்டும்.

நாங்கள் இன்றிரவு அந்தப் பரிதாபமான தகப்பன்மார்களுக்காகவும் தாய்மார்களுக்காகவும் வருந்துகிறோம். அதைக் குறித்த அனுபவத்தை நான் அறிந்தவனாக அவர்களுக்காக நான் வருந்துகிறேன். அந்தப் பரிதாபமான இருதயங்கள் நொறுக்கப்பட்டிருப்பதை நான்-நான் உணருகிறேன், கர்த்தாவே. தேவனே, இரக்கமாயிரும். அந்தக்

கொள்ளைநோய் இந்த இதே இரவிலேயே விலகிப்போகும்படியாக, நான் ஜெபிக்கிறேன். இன்னும் கூடுதலாக ஒரு நோயாளியும் பாதிக்கப்படாமல் (broke out) இருப்பார்களாக. அது இப்பொழுதே நிறுத்தப்படுவதாக. சத்துரு தாமே பின்வாங்கிப் போய், அழிவுக்குள்ளாக வீசி எறியப்பட்டுப் போவானாக.

தேவனுடைய தூதனானவர் தாமே அந்தப் பட்டணத்திற்கு ஆதரவாக நிற்பாராக. அவர் நிற்பதை அவைகள் காணும்போது, அந்தப் பிசாசுகள் சிதறி ஓடும் என்பதை நாங்கள் அறிவோம். இதை அருளும், பிதாவே, நீர் இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம், நாங்கள் கெஞ்சி மன்றாடுகிறோம், நாங்கள் பாவிகள் என்றும், இதற்கு தகுதியற்றவர்கள் என்றும் அறிக்கை பண்ணுகிறோம். ஆனால் தேவனுடைய இராஜ்யத்தின் நிமித்தமாக, நீர் இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம், நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

பரிதாபமான சிறு பிள்ளைகள் அவ்விதமாக அவதிப்பட வேண்டியிருப்பது மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தக் கடைசி சத்துரு அவருக்கு கீழ்ப்படுத்தப்படும் போது, அது ஒரு அற்புதமான

நாளாக இருக்காதா? அப்போது நாம் வெற்றி வாகைசூடினவர்களாக, அவருடைய சாயலுக்குள்ளாக்கப்பட்டு, அழகானவர்களாக நின்று கொண்டிருப்போம், முப்பர்கள் எல்லாரும் அவருக்கு முன்பாக முகங்குப்புற, அவருக்கு முன்பாக தங்கள் முகங்குப்புற விழுந்தார்கள் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சகோதரன் ரியான் அவர்களே, அது அற்புதமாக இருக்கும், அது அவ்வாறு இருக்காதா?

5. எப்படியாவது இதெல்லாம் முடியும்போது, நான் சந்தோஷப்படுவேன். உங்களுக்குத் தெரியும், உலகமானது எல்லா நேரமும் கொடுமையுள்ளதாகவும் மேலும் மோசமாகவும் ஆகிக் கொண்டு வருவதை நீங்கள் காணும்போது, பத்மு தீவிலிருந்த யோவான், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கூறினதை எண்ணிப் பார்க்கிறேன். இதைக் குறித்து ஒருவிதத்தில் களைப்புற்றவர்களாகவும் சலிப்படைந்தவர்களாகவும் இருக்கிறேன், நீங்களும் அவ்வாறு இல்லையா?

பிரிவதைக் குறித்து நான் எண்ணிப் பார்க்கிறேன். நான் ஒரு கூட்ட ஜனங்களுக்குள் வருகிறேன். அப்போது சில நண்பர்களைப் பார்த்து, அவர்களுடைய கரங்களைக் குலுக்கத்

தொடங்குகிறேன், பிறகு பிரியாவிடை பெற்று, தேசத்தைக் கடந்து வேறு ஏதோவொரு இடத்திற்கும், அதன்பிறகு இங்கும் பிறகு அங்குமாகப் போய்விடுகிறேன்... வீதிகளில் நோக்கிப் பார்க்கும்போது, இதோ பாவத்தைக் காண்கிறோம் மேலும் அது - அது அப்படியே ஒருவிதத்தில் உங்கள் இருதயத்தை இரத்தம் கசிய வைத்து விடுகிறது, நீங்கள் - ஒருகாலத்தில் அனுபவங்களை உடையவர்களாக இருந்த ஜனங்களில் அநேகர் பழைய நிலைக்கு விழுந்து போகத் தொடங்குவதை நீங்கள் காணத் தொடங்குகிறீர்கள்.

அப்போது நீங்கள், “கர்த்தராகிய இயேசுவே, வாரும்” என்று கதறத் தொடங்குகிறீர்கள்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*